இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 03.04.2026

# கொள்கை உறுதிமொழி!

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் மிக மிக முக்கியமானது கொள்கை உறுதிமொழி ஆகும். ஐம்பதுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் துறை வாரியாக பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு அரசாங்கம் அமையும் போது, அந்த அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் வாக்குறுதிகளாக அவை அமைந்துள்ளன. அவை அனைத்தும் தேர்தல் வாக்குறுதிகள். ஒரு அரசியல் இயக்கத்துக்கு மிக அடிப்படையானது கொள்கை உறுதிமொழி ஆகும். அதன் அடிப்படையில் தான் அந்த இயக்கத்தை அளவீடு செய்ய வேண்டும். அந்த இயக்கத்தின் உண்மையான பலம் என்பதும் அதுதான். எனவேதான், தேர்தல் அறிக்கையின் முகப்பிலேயே கொள்கை உறுதிமொழியை கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வடித்துத் தந்துள்ளார்கள்.**

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் வழித்தடத்தில் இக்கொள்கை உறுதிமொழியை உருவாக்கி இருக்கிறார் தலைவர், மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் உருவான நாளன்றே இக்கொள்கை அடித்தளத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள்.

**“திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது, திராவிடர் கழகத்துக்குப் போட்டியாக அல்ல. அதே கொள்கைப் பாதையில்தான் திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீதேதான் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சமதர்மக் குறிக்கோள், அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்று விடுதலை ஆகிய கொள்கைகள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகளாகும்” என்று தெளிவுபடுத்தினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.**

கருப்பு, சிவப்புக் கொடிக்கான விளக்கமே கொள்கை விளக்கம் ஆகும்.

★ அரசியல், பொருளாதார, சமுதாய வாழ்விலுள்ள இருண்ட நிலையை உணர்த்தி நிற்கும் அறிகுறியே கருப்பு –

அம்மூன்று துறைகளிலும் உள்ள இருண்ட நிலையைப் போக்கி ஒளிநிலையை உண்டாக்க வேண்டும் என்பதன் அடையாளமே சிவப்பு – என்று வரையறை செய்யப்பட்டது.

அறநெறி அரசியலுக்காகவும் –

பேதமற்ற சமுதாய அமைப்புக்காகவும்–

சமதர்மத்துக்காகவும் – பாடுபடும் உறுதி கொண்ட தி.மு. கழகம் என்று 1967 தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் மறைவுக்குப் பிறகு கூடிய 1971 திருச்சி மாநாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ஐம்பெரும் முழக்கங்களை வடித்துக் கொடுத்தார்கள்.

★ **அண்ணா வழியில் அயராது உழைப்போம்!**

★ **ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!**

★ **இந்தித்திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**

★ **வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!**

★ **மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி!**

– ஆகிய ஐந்து முழக்கங்களுக்குள் அனைத்துமே அடங்கியுள்ளது. அவர் வழிவந்த தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 2018 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் நாள் ஈரோட்டில் நடந்த மண்டல மாநாட்டில் தனது ஐம்பெரும் முழக்கங்களை அறிவித்தார்கள்.

★ **கலைஞரின் கட்டளையைக் கண்போல் காப்போம்!**

★ **தமிழரை வளர்த்து தமிழைப் போற்றுவோம்!**

★ **அதிகாரக் குவியலை அடித்து நொறுக்குவோம்!**

★ **மதவெறியை மாய்த்து மனிதநேயம் காப்போம்!**

★ **வளமான தமிழகத்தை வளர்த்தெடுப்போம்!**

– ஆகிய ஐம்பெரும் முழக்கங்களில் அடுத்த கட்டப் பாதைகள் அமைந்திருந்தன. இத்தகைய கொள்கை வழித்தடத்தில் மாறாமல் இன்றைய கொள்கை உறுதிமொழியும் அமைந்துள்ளது.

★ அரசியலில், ஜனநாயக உரிமைப் பாதுகாப்பு – பொருளாதாரத் துறையில், ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ நிலை – எல்லோருக்கும் நல்வாழ்வு கிடைத்திட சமதர்மம், சமூகத்துறையில், பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சியும் பேதமற்ற சமூக அமைப்பும் ஏற்படுத்துவதற்கான முறைகளை மேற்கொள்வது என்று உறுதி அளிக்கிறது.

★ தமிழைக் காப்பதும், உரிமை பெற்ற பேரினமாய் தமிழினத்தை வளர்ப்பதும், தன்னிறைவு பெற்ற தமிழ்நாட்டை உருவாக்குதலும்தான் நமது மாபெரும் இலக்குகள்!

★ தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலம் ஆக்குவதும், உலகில் குறிப்பிடத்தக்க பகுதியாக உயர்த்துவதும்தான் நமது நோக்கம்!

★ இந்திமொழித் திணிப்பு என்பது ஒற்றை மொழி ஆதிக்க நடவடிக்கையாக அமைந்திருப்பதால் அதனை முழு மூச்சாக எதிர்க்கிறோம்!

★ இந்திய மாநில மொழிகள் அனைத்தும் ஆட்சிமொழி ஆக்கப்பட வேண்டும்!

★ ஒன்றிய அரசின் அதிகாரங்களுக்கும் வரி விதிப்பு உரிமைகளுக்கும் வரம்பு நிர்ணயிக்கும் வகையில் இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்!

★ ஒன்றிய அரசின் அரசியல், சமூக, பொருளாதார முடிவுகள் அனைத்தும் மாநிலங்களைப் பாதிப்பதால், மாநில அரசுகளின் ஆலோசனைகளைப் பெற்ற பிறகே ஒன்றிய அரசு அந்த முடிவுகளை எடுக்க வேண்டும்!

★ தமிழர்களைப் பிளவுபடுத்தும் சாதிப் பிரிவினைகள், வகுப்புவாதம் உள்ளிட்ட பேதங்கள் நமது வளர்ச்சிக்குப் போடப்படும் விலங்குகள். ஆகவே, சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளுக்கும் முற்போக்கு எண்ணங்களுக்கும் உரிய முக்கியத்துவம் அளித்துத் தொடர்ந்து செயல்படுவோம்!

★ மதச்சார்பற்ற தன்மைக்குப் புறம்பாக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் நிராகரிப்போம்!

★ சமத்துவம், சமூகநீதி, சகோதரத்துவம், பகுத்தறிவு, சுயமரியாதை ஆகிய கோட்பாடுகளை மக்கள் மனதில் விதைத்து, அதற்கேற்ப சட்டங்களை இயற்றி மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதே நமது நோக்கம்!

★ “எல்லார்க்கும் எல்லாம்” என்பதே திராவிடவியல் கோட்பாடு என்று கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நமக்கு வகுத்துத் தந்துள்ளார். தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும்பின்தங்கவிடமாட்டேன்என்றஅவரது உறுதிமொழியைக் காக்க எந்நாளும் உழைப்போம்.

**– திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலம் என்பது இத்தகைய கொள்கை உரமும், இக்கொள்கையைத் தாங்கிய தொண்டர்களின் நெஞ்சுரமும்தான்.**



திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (2.4.2026) சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட டாக்டர் பெசன்ட் சாலையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பல்நோக்கு மையத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி ஆர்.சுகந்தி அவர்களிடம் தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே சிற்றரசு, பகுதிச் செயலாளர் எஸ். மதன்மோகன், வழக்கறிஞர் அ.சரவணன் ஆகியோர் உடனிருந்தனர்.

### தேர்தல் வாக்குறுதி தந்தால் அதை

# தி.மு.க. நிறைவேற்றும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது!

## தூத்துக்குடியில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!




தூத்துக்குடி, ஏப்.3–

நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தூத்துக்குடி கலைஞர் அரங்கத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி தேர்தல் அலுவலகத்தை திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கனிமொழி கருணாநிதி எம்.பி., “மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரித்து, திமுக சார்பில் நாளை எனது பிரச்சாரத்தை கீழடியில் தொடங்க உள்ளேன்” என்று தெரிவித்தார்.

தூத்துக்குடியைப் பொறுத்தவரை, கீதா ஜீவன் வெற்றி பெறக்கூடிய வேட்பாளர் என்று என்னால் சொல்ல முடியும். காரணம், தொடர்ந்து மக்கள் பணியை செய்து வரும் ஒருவர்; தொகுதி மக்களுடன் பரிச்சயம் உடையவர். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைகளிலும், அமைச்சராக அவர் செய்துள்ள பல பணிகளிலும், நமது முதல்வருக்கு பெருமை சேர்த்த வகையில் பணிகளை செய்து இருக்கிறார்.

தி.மு.க. ஆட்சி மக்களுக்கான ஆட்சியாகவும், முக்கியமான பெண்களுக்கான, பெண்களை உயர்த்தக் கூடிய ஆட்சியாக அமைந்துள்ளது. இளைஞர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி திட்டமிடக்கூடிய பல்வேறு தொழில் முதலீடுகளைக் கொண்டு வந்து வேலை வாய்ப்பை உருவாக்கிய ஆட்சியாக அமைந்துள்ளது.

மற்ற தேர்தல் அறிக்கையை மக்கள் திரும்பி கூட பார்க்காத சூழலில், திமுக தேர்தல் அறிக்கை கொண்டாட கூடிய சூழ்நிலை இருக்கிறது என்றால் அதற்கு காரணம் திமுக எந்த வாக்குறுதியை தந்தாலும் அதை நிறைவேற்றும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது.

நம்முடைய முதல்வர் தேர்தல் நேரத்தில் தந்து இருக்கக்கூடிய வாக்குறுதிகளை மக்கள் ஆவலோடும், திமுக மறுபடியும் ஆட்சிக்கு வந்து நிறைவேற்றி தர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். விரைவில் முதல்வர் ஸ்டாலின் ஆட்சி மீண்டும் அமையப் போகிறது; மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.

புதிய வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டதில் எதிர்ப்புகள் இருப்பது குறித்து கேள்விக்கு, வேட்பாளர்களை மாற்றி அறிவிக்கும் போது சில நேரங்களில் கருத்து வேறுபாடுகள் இருக்கும். கூட்டணி பேச்சுவார்த்தைகளின்போதும் சில சர்ச்சைகள் உருவாகும். எல்லோருக்கும் தெரியும் நாம் கருத்தியலால் ஒன்றுபட்டவர்கள். அதனால், ஒன்றாக இணைந்து பணியாற்றுவோம் வெற்றியை நோக்கி பணியாற்றுவோம். அதேபோன்று எந்தப் பகுதியில் நாம் புதிய வேட்பாளரை அறிவிக்கும் போது அங்கு இருப்பவர்களுக்கு சிறிய வருத்தம் இருந்தாலும் அனைவரும் திராவிட கழக தோழர்களாக இணைந்து பணியாற்ற வேண்டும்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டதாக மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் முன்வைத்த குற்றச்சாட்டு குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, அதற்கு பதில் சொல்ல வேண்டியது அவரே. அவரது குற்றச்சாட்டின்படி சதவிகித அடிப்படையில் பார்க்கும்போது, தேசிய அளவில் தமிழ்நாட்டில்தான் குற்றங்கள் குறைவாக உள்ளது. குற்றங்கள் நடந்தால் கூட அதில் நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆட்சி தி.மு.க. ஆட்சி. விரைந்து நடவடிக்கை எடுத்து நியாயம் கிடைக்கக்கூடிய ஆட்சி தி.மு.க. ஆட்சி.

பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களை விட, நிச்சயமாக தமிழ்நாட்டில் குற்றங்கள் குறைவாக உள்ளது. அவர்கள் கூட்டணியில் உள்ளவர்கள் தவறு செய்தவர்களை எவ்வாறு காப்பாற்றினர் என்பதும் அனைவருக்கும் தெரியும். இன்று குற்றம் செய்யக் கூடியவர்களுக்கு எப்படி மிக விரைந்து தண்டனை கொடுக்கப்படுகிறது என்பதை நாம் பார்க்கிறோம் என்று பதிலளித்தார்.

தொடர்ந்து, முன்னாள் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மறைந்த கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர், தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கீதா ஜீவனை ஆதரித்து பிரச்சாரத்தை தொடங்கி, கனிமொழி கருணாநிதி எம்.பி. உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



நெல்லை மத்திய மாவட்டம் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம் பாளை பி.பி.எல். திருமண மண்டபத்தில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளரும் பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளருமான மு.அப்துல் வகாப் தலைமையில் நடைபெற்றது. மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்வில் கழக துணைப் பொது செயலாளர், மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் தீர்மானக் குழு உறுப்பினர் சுப சீதாராமன் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.